## கற்றல் விளைவு / திறன் வழி மதிப்பீட்டுத் தேர்வு

**வகுப்பு : 8**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

EMIS ____________ **மதிப்பெண்கள்: 25**

**மொழி : தமிழ் வழி** **தமிழ்** **நேரம் :40 நிமிடங்கள்**

**கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து பொருள் உணர்ந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.**

மதுரையில் அம்பலவாணர் என்ற அறிஞர் இருந்தார். திருச்சியில் பிறந்த அவர் தஞ்சையில் இலக்கணம், இலக்கியம், தருக்கம் போன்றவை கற்று அவற்றில் கரை கண்டவராக விளங்கினார்

ஒருமுறை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடும் சமயத்தில், அவருக்கு வைகை ஆற்றைக் கடந்து தேனி செல்லும் அவசியம் ஏற்பட்டது. அங்கிருந்த படகோட்டியிடம் "நான் அக்கரைக்கு செல்ல வேண்டும். என்ன கூலி கேட்டாலும் தருகிறேன்" என்றார்.

படகோட்டி ஆற்றில் படகை செலுத்த தொடங்கியதும் அறிஞர் "நீ இலக்கியம் படித்திருக்கிறாயா? எனக்கேட்க இல்லை என்றான் அவன். உன் வாழ்வில் கால் பங்கை வீணாக்கி விட்டாய். சரி தருக்கமாவது படித்திருக்கிறாயா? எனக் கேட்க இல்லை என்றான் அவன். "உன் வாழ்வில் பாதியை விணாக்கி விட்டயே! என்ன வாழ்க்கை வாழ்கிறாயோ நீ?" எனக் கேட்க அவன் பதில் ஏதும் பேசவில்லை.

படகு ஆற்றின் நடுவில் செல்லும்போது, அவரைப் பார்த்து அவன் "ஐயா! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?" எனக் கேட்டான்.

"எனக்கு நீச்சல் தெரியாது. ஏன் கேட்கிறாய்?" எனக் கேட்டார். உடனே அவன், படகில் ஓட்டை விழுந்து உள்ளே தண்ணீர் வருகிறது. சிறிது நேரத்தில் படகு மூழ்கிவிடும். என்னைப் போல உங்களுக்கும் நீச்சல் தெரிந்திருந்தால் உயிர் தப்பலாம். இப்போது உங்கள் முழு வாழ்க்கையும் வீணாகி விட்டு எனக் கூறி விட்டு ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கினான். அவர் செய்வதறியாது மூழ்கத் தொடங்கினார்.

ஆதாரம்: பழமொழிக்கதைகளும் பழமொழி விளக்கக் கதைகளும்_பேராசிரியர் எ.சோதி_டிச 2008_புத்தகத்திலிருந்து 'வாழ்க்கை கல்வியே மேலானது' எனும் தலைப்பில் உள்ள கதை

**வினாக்கள்:**

**1. வைகை ஆறு எங்கு உள்ளது?**

அ. தேனி ஆ. மதுரை இ. திருச்சி ஈ. தஞ்சை

**2. கதை கூறும் மையக் கருத்து என்ன?**

அ. பல்துறைக் கல்வியே மேலானது ஆ. அமைதியாய் இருப்பதே அவசியம்
இ. வாழ்க்கை கல்வியே மேலானது ஈ. நீச்சல் கற்பது அவசியம்

**3. "<u>கரை கண்டவர்</u> – <u>கரை புரண்டு</u>" இவ்விரு சொற்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு உணர்ந்து, சரியான பொருள்களைக் கொண்ட வாக்கியத்தைத் தேர்வு செய்க.**

அ. இக்கரையில் நின்றவர் அக்கரைக்கு ஓடினார்

ஆ. நிபுணர் ஒருவர் கட்டுமீறிய அறிவுடன் செயல்பட்டார்

இ. அறிவாளி ஒருவர் அதிகமான கரைகளைக் கண்டிருக்கிறார்

ஈ. இக்ரையில் உள்ள ஒருவர் அக்கரைக்கு செல்ல ஆசைப்பட்டார

**4. கதைச் சூழலுக்கு ஏற்ற பழமொழி எது?**

அ. ஐயமே அறிவின் திறவுகோல்

ஆ. அரைகுறை அறிவு ஆபத்தில் முடியும்

இ. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

ஈ. கண்டதைக் கற்பவன் பண்டிதன் ஆவான

**5. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" – எனும் சொலவடையைப் பயன்படுத்த ஏற்ற இடத்தைத் தேர்வு செய்க.**

அ. அறிஞர் நிச்சல் கற்கவில்லை

ஆ. படகோட்டி தருக்கம் கற்கவில்லை.

இ. படகோட்டி இலக்கியம் கற்கவில்லை.

ஈ. அறிஞர் இலக்கணம் பற்றி கேட்கவில்லை

## English

**Read the following passages and answer the questions based on your understanding:**

There was a girl named Priya who lived in Chennai. She loved Bharatanatyam, a beautiful dance. Even when she was little, she enjoyed watching dancers perform at events. She tried copying their graceful moves and steps. Her fascination soon turned into a serious interest.

Priya's parents noticed her passion and got her into Bharatanatyam classes with a Guru named Meera. She practised a lot, getting better every day. Her guru saw her dedication and helped her become an even better dancer. Priya took part in local dance competitions and won people's hearts. She told stories through her dances and captivated everyone.

Things changed when a big dance festival came to Chennai. Famous dancers and critics were there for the dance festival. Priya worked really hard and performed a dance on the importance of nature to mankind. Everyone loved it. Priya became known all around and got invitations to performat important events.

Thus, Priya's hobby became her job, and she earned a name for herself. She made Tamilnadu's culture alive but made it popular. Her journey showed that if you work hard on your passion and never give up, you can achieve your dreams.

**Questions:**

1. **What is Priya's favourite dance form?**

   a. Kathak b. Bharatanatyam c. Hip-hop d. Contemporary

2. **How did Priya show her interest in dancing when she was young?**

   a. She watched movies
   b. She tried to copy dancers' moves
   c. She read books about dancing
   d. She sang songs about dance

3. **What did Priya's parents do when they saw her passion for dancing?**

   a. They bought her a new dress
   b. They enrolled her in Bharatanatyam classes
   c. They asked her to stop dancing
   d. They took her to a music concert

4. **Why did Priya become well-known after the dance festival?**

   a. She performed a dance about friendship
   b. She performed a dance on the importance of nature
   c. She performed a dance about space exploration
   d. She performed a dance about cooking

5. **What lesson can be learned from Priya's story?**

   a. Dancing is not a good career choice
   b. Hard work and dedication can lead to success
   c. Nature is not important to mankind
   d. Priya's parents didn't support her dancing

## கணிதம்

1. **கீழ்க்கண்ட தொடரை உற்று நோக்கி x இன் மதிப்பைக் காண்க.**

   $(22)^2 = 484$, $(202)^2 = 40804$ மற்றும் $(x)^2 = 400080004$

   a. 20022 b. 22002 c. 20002 d. 200002

2. **ஒரு பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவர்கள் கொடி நாள் நிதியாக மொத்தம் ₹ 2025 நன்கொடை வழங்கினர். ஒவ்வொரு மாணவரும் வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நன்கொடை அளித்தனர் எனில், வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.**

   a. 25 b. 35 c. 45 d. 55

3. **விவசாயி ஒருவர் 2401 ரோஜா செடிகளை நட விரும்பினார். ஒவ்வொரு வரிசையிலும் சம எண்ணிக்கையில் ரோஜா செடிகள் இருக்கும் வகையில் முடிவு செய்கிறார் எனில், வரிசைகளின் எண்ணிக்கை மற்றும் ரோஜா செடிகளின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.**

   a. 39 b. 41 c. 49 d. 51

4. **ஒரு பள்ளியில் 460 குழந்தைகள் படிக்கின்றனர். ஒரு காலை வழிபாட்டுக் கூட்டத்திற்கு அவர்கள் நிரைகளின் எண்ணிக்கை நிரல்களின் எண்ணிக்கைக்கு சமமாக நிற்க வைக்க வேண்டும். இந்த அமைப்பில் எத்தனை குழந்தைகள் விடுபடுவார்கள்?**

   a. 19 b. 18 c. 17 d. 16

5. **ஒரு தோட்டக்காரரிடம் 1100 செடிகள் உள்ளன. வரிசைகளின் எண்ணிக்கையும் நெடுவரிசைகளின் எண்ணிக்கையும் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் இவற்றை நட விரும்புகிறார். அவருக்குத் தேவையான குறைந்தபட்ச தாவரங்களின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.**

   a. 11 b. 56 c. 89 d. 91

## அறிவியல்

1. **சீல் செய்யப்பட்ட நெகிழிப் புட்டியின் உள்ளே உள்ள அழுத்தம் வளிமண்டல அழுத்தத்தை விட அதிகரிக்கும் போது , நெகிழிப் புட்டிக்கு என்ன நிகழும்?**

   a. நெகிழிப் புட்டி வெடித்துவிடும்
   b. நெகிழிப் புட்டி நொறுங்கிவிடும்
   c. நெகிழிப் புட்டி அதே நிலையில் இருக்கும்
   c. நெகிழிப் புட்டி சுருங்கிவிடும்

2. **பின்வரும் எடுத்துக்காட்டுகளில் விசை செயல்படுவதன் மூலமாக வடிவ மாற்றம் அடைவது எது?**

   a. வேகமாக பந்தை உதைத்தல்
   b. மின்விசிறியை இயக்குதல்
   c. உயரமான இடத்தில் இருந்து குதித்தல்
   d. ஒரு காகிதத்தை இரண்டு துண்டுகளாக கிழித்தல்

3. **இரண்டு உலர்ந்த சோதனைக் குழாயை எடுத்துக் கொள்ள வேண்டும். A என்ற சோதனை குழாயில் சல்பியூரிக் அமிலம் எடுத்து, அதில் சிறிதளவு நீர் சேர்க்கப்படவேண்டும். B என்ற சோதனை குழாயில் சோடியம் ஹைட்ராக்சைடை எடுத்து அதிலும் சிறிதளவு நீர் சேர்க்க வேண்டும். இப்பொழுது இரண்டு சோதனைக் குழாயின் அடியில் கை வைத்து பார்க்க வேண்டும். எந்த சோதனை குழாய் குளிர்ச்சியாக உள்ளது?**

a. A சோதனைக் குழாய்　　b. B சோதனைக் குழாய்
c. A & B சோதனைக் குழாய்　　d. இரண்டும் குளிர்ச்சியாக இல்லை

4. **தீமை செய்யும் பூஞ்சைகளின் அடிப்படையில் பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி.**

a. கிளாவிசெப்ஸ் பர்பூரியா　　b. எரிமோதீசியம் ஆஸ்பியீ
c. ஃபியூசேரியம் ஆக்சிஸ்போரம்　　d. மைக்கோஸ்போரம் ஃபர்ஃபர்

5. **பாசிகளில் காணப்படும் நிறமியின் வகை மற்றும் உணவு சேமிப்பின் அடிப்படையில் சரியான ஒன்றினைத் தேர்ந்தெடு.**

a. லேமினேரியாவில் காணப்படும் நிறமி ஃபைக்கோ எரித்திரின் மற்றும் அதன் சேமிப்பு உணவு ஸ்டார்ச்
b. பாலிஸைஃபோனியாவில் காணப்படும் நிறமி ஃபியூக்கோசாந்தின் மற்றும் அதன் சேமிப்பு உணவு மானிடால்
c. கிளாமிடோமோனாஸில் காணப்படும் நிறமி பச்சையம் மற்றும் அதன் சேமிப்பு உணவு ஃபுளோரிடியன் ஸ்டார்ச்
d. ஆசிலட்டடோரியாவில் காணப்படும் நிறமி ஃபைக்கோசயனின் மற்றும் அதன் சேமிப்பு உணவு சயனோஃபைசியன் ஸ்டார்ச்

## சமூக அறிவியல்

1. **இந்தியராகிய மீனா, அமெரிக்கராகிய ஆதம் என்பாரை மணந்து, தற்போது அமெரிக்காவில் வாழ்கிறார். 2020– ல் அமெரிக்காவில் பிறக்கும் அவர்களின் மகள், எந்த அடிப்படையில், இந்தியக் குடியுரிமைப் பெறுகிறார்?**

a. அச்சமயம் பெற்றோரில், தந்தை இந்தியக் குடிமகனாக இருப்பதால்
b. மகளின் பிறப்பை 2023–ல் இந்தியத்தூதரகத்தில் பதிவு செய்வதால்
c. பெற்றோரில் ஒருவர் அச்சமயம் இந்தியக் குடிமகனாக இருப்பதால்.
d. மகளின் பெற்றோர் எதிகாலத்தில் இந்தியாவிற்கு திரும்புவதாக சான்றளித்ததால்

2. **நீலா என்பார் இந்தியாவில் பிறந்து இந்தியாவில் நிரந்தரமாக வாழ்கிறார். ஜான் ஜெர்மனியில் பிறந்து, இந்தியாவில் நிரந்தரமாக வாழ்கிறார். கொடுக்கப்பட்டத் தகவல் அடிப்படையில் கீழ்காணும் எந்தத் தெரிவுகள் சரியானவை?**

i. நீலா , நாட்டுரிமை பெற்றுள்ளார். ஜான் , குடியுரிமை பெற்றுள்ளார்.

ii. நீலா, குடியுரிமை பெற்றுள்ளார். ஜான், நாட்டுரிமை பெற்றுள்ளார்.

iii. நீலா, ஜான் இருவருமே குடியுரிமை பெற்றுள்ளனர்.

iv. நீலா, ஜான் இருவருமே நாட்டுரிமை பெற்றுள்ளனர்.

a. i மற்றும் ii சரி b. i மற்றும் iii சரி

c. ii மற்றும் iv சரி d. ii மற்றும் iii சரி

3. **கமலாவின் முன்னோர் இந்தியாவிலிருந்து கனடா சென்று, அங்கேயே குடியுரிமைப் பெற்று வாழ்கின்றனர். எனில், கமலா இந்தியாவில் எத்தகைய உரிமையைக் கோரிப் பெறமுடியும்?**

a. வெளிநாடு வாழ் இந்தியர் b. இந்தியக் குடியுரிமை

c. இந்தியப் பூர்வீகக் குடியினர் d. இரட்டைக் குடியுரிமை

4. **அனு சென்னையில் பிறந்து வளர்ந்தவர் , அகமதாபாத்தில் பணி காரணமாக நிரந்தரமாகக் குடியேறுகிறார். எனில், தற்போது அவர் எத்தகைய குடியுரிமையோடு அனுமதிக்கப்படுவார்?**

a. மாநிலக் குடியுரிமைப் பெற்றால் அனுமதிக்கப் படுவார்.

b. இரட்டைக் குடியுரிமைப் பெற்றால் அனுமதிக்கப் படுவார்.

c. தேசியக் குடியுரிமையில் மாற்றம் ஏதுமின்றி அனுமதிக்கப் படுவார்.

d. தேசியக் குடியுரிமையில் மாற்றத்தோடு அனுமதிக்கப் படுவார்.

5. **கீழே கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகளுள், இந்தியாவில் நடக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெறக்கூடியவர்________________.**

a. இந்தியாவில் படிக்கும் வெளிநாட்டு குடியுரிமை கொண்டவர்

b. வெளிநாட்டில் வசிக்கும் இந்திய பூர்வீகக் குடியினர்

c. இந்தியக் குடியுரிமைக் கொண்டு வெளிநாட்டில் பணிபுரிபவர்

d. இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்

## கற்றல் விளைவு / திறன்வழி மதிப்பீட்டுத் தேர்வு (விடைக் குறிப்பு)

**வகுப்பு : 8** **மொழி : தமிழ் வழி**

**பாடம் : தமிழ்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | ஆ. | மதுரை |
| 2. | இ. | வாழ்க்கை கல்வியே மேலானது |
| 3. | ஆ. | நிபுணர் ஒருவர் கட்டுமீறிய அறிவுடன் செயல்பட்டார் |
| 4. | இ. | ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது |
| 5. | அ. | அறிஞர் நீச்சல் கற்கவில்லை |

**பாடம் : ஆங்கிலம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | b. | Bharatanatyam |
| 2. | b. | She tried to copy dancers' moves |
| 3. | b. | They enrolled her in Bharatanatyam classes |
| 4. | b. | She performed a dance on the importance of nature |
| 5. | b. | Hard work and dedication can lead to success |

**பாடம் : கணிதம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | c. | 20002 |
| 2. | c. | 45 |
| 3. | c. | 49 |
| 4. | a. | 19 |
| 5. | b. | 56 |

**பாடம் : அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | a. | நெகிழிப் புட்டி வெடித்துவிடும் |
| 2. | d. | ஒரு காகிதத்தை இரண்டு துண்டுகளாக கிழித்தல் |
| 3. | d. | இரண்டும் குளிர்ச்சியாக இல்லை |
| 4. | b. | எரிமோதீசியம் ஆஸ்பியீ |
| 5. | d. | ஆசிலட்டடோரியாவில் காணப்படும் நிறமி ஃபைக்கோசயனின் மற்றும்அதன் சேமிப்பு உணவு  சயனோஃபைசியன் ஸ்டார்ச் |

**பாடம் : சமூக அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | c. | பெற்றோரில் ஒருவர் அச்சமயம் இந்தியக் குடிமகனாக இருப்பதால். |
| 2. | b. | i மற்றும் iii சரி |
| 3. | c. | இந்தியப் பூர்வீகக் குடியினர் |
| 4. | c. | தேசியக் குடியுரிமையில் மாற்றம் ஏதுமின்றி அனுமதிக்கப்படுவார். |
| 5. | c. | இந்தியக் குடியுரிமைக் கொண்டு வெளிநாட்டில் பணிபுரிபவர் |